## தூண்களா, தூண்டில்களா?

வாசிக்க: நெகேமியா 1:1-11

***“ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்” (தானி 9:19அ)***

இது மிஷனரி எழுச்சிக் காலம். இந்தியாவில் பல மிஷனரி இயக்கங்கள் தோன்றிய தோடல்லாமல் கிறிஸ்தவரின் எண்ணிக்கையும் கூடி வருகிறது. ஆனாலும் ஊழிய உணர்வுடன் ஆன்மீகக் கண்ணோட்டம் கொண்டால் இன்றையப் பல சபைகளில் சில பரிதாப நிலைகளைக் காணலாம். அவற்றை இன்றும் நாளையும் கவனிப்போம்.

*r அமைப்பாளர் பலர், அழுவோரோ சிலர்!*

மிஷனரிச் சவால் கூட்டங்களையும், காணிக்கை சேர்ப்புப் பணிகளையும், மிஷனரி ஜெபக்கூட்டங்களையுங்கூட முன்னின்று நடத்த பலர் முன்வரலாம். ஆனால் ஜெபத்தில் அழுது புலம்புவோருக்கோ பஞ்சம். திட்டமிட திறன் தேவை, கதறி ஜெபிக்கவோ கண்ணீர் தேவை. மாம்சீக உற்சாகத்தில் அமைப்புகளை ஒழுங்கு படுத்தலாம்; ஆனால் நாம் உருக்கப்படாமல் ஓலமிட முடியாது.

அமைப்போர் தேவைதான்; ஆனால் அவர்கள் அழுது வேண்டுவோருக்குப் பதிலாக முடியாது. பவுல் காரியசித்திக்காரனாகும் முன்பு கண்ணீர் விடுபவனாயிருந் தான். அவனே ஒரு மிஷனரி இயக்கம். அவனும் ஜெபத்தில் போராடினான்; மற் றோரையும் அவனோடுகூட ஜெபத்தில் போராடச்சொன்னான். ரோமர் 15:15-32இல் அவனது மிஷனரித் திட்டங்களும் ஒழுங்குகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. எப்பாப்பிரா கொலோசே சபையிலிருந்துகொண்டு தொலைவிலுள்ள லவோதிக் கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும் தூர தரிசனம் கொண்டு மன்றாடிக் கொண்டிருந்தான் (கொலோ 4:12,13). அழுபவர் பலரும் அமைப்பவர் சிலருமானால் அல்லல்கள் அற்பமும் சொற்பமுமாகிவிடுமே.

*r அனுப்புவோர் பலர், ஆத்துமாதாயகரோ சிலர்!*

இயேசு ஊழியரை அனுப்புகிறவராயிருந்தார் (மத் 10:5). அதே நேரத்தில் தாமும் ஆத்தும ஆதாயகராகப் புறப்பட்டுச் சென்றார் (மத் 11:1). திருச்சபை முழுவதும் தாங்குவோராலேயே நிறைந்திருத்தல் பரிதாபம்! அது ஆலயம் முழுவதும் தூண்களால் நிறைந்திருப்பது போலாகுமே. சிந்தித்துப் பாருங்கள்! தூண்டில்கள் எடுத்துக் கொண்டு வெளியே செல்லுவோம். நாம் ஆத்துமாக்களோடு தனிப்பட்ட ஈடுபாடு கொள்வது மிஷனரி முயற்சிகளுக்காகக்கூட பலியாகிவிடக்கூடாது. இயேசு முதலும் கடைசியும் ஓர் தனியாள் பணியாளனாயிருந்தார். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவரது பிரதான அழைப்பு மனிதரைப் பிடிப்போனாயிருக்கவே (மத் 4:19). ஆத்து மாக்களோடுள்ள தனிப்பட்ட இடைபாடுதான் மிஷனரி ஊழிய ஊக்கியாகிய ஆத்தும பாரத்தை வளர்க்கிறது.

ஆளெடுத்து ஆத்தும ஆதாயத்திற்குப் பழக்குவிக்கும் தளங்களாக சபைகள் மாறவேண்டும். உங்கள் சபையில் ஆத்தும ஆதாயப் பயிற்சி கிரமமாய் நடைபெறு கிறதா ? உங்கள் சபை எத்தனை ஊழியரை அனுப்பியிருக்கிறது என்று நான் கேட்கவில்லை. ஆத்தும ஆதாயம் செய்து ஆத்தும ஆதாயகரை உருவாக்காத சபையை மிஷனரிச் சபை என அழைக்கத் தயங்குகிறேன். கிறிஸ்தவரல்லாத ஒரு தமிழனைவிட வட இந்தியன் ஒருவனின் ஆத்துமாவின் விலை அதிகம் என்னும் தவறான எண்ணத்தை அகற்றுங்கள்.